www.padippakam.com



# பண்டாரவன்னியனும் காக்கைவன்னியனும் II

49


கி.பி 1803 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற யுத்தத்தில் பண்டாரவன்னியன் தோல்வியுற்று முல்லைத்தீவை இழந்துவிட்டாலும் அவன் சோர்ந்து போய் விடவில்ல. ஆங்கிலேயர்களுக்கு அடி பணிந்து திறை செலுத்தி சலுகைகள் பெற்று வாழ விரும்பவில்லை.

பனங்காமம் பகுதியில் இருந்து கொண்டு கண்டி மன்னன் ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கனின் உதவியோடு தொடர்ந்து ஆங்கிலேயருக்கு எதிரான யுத்தத்தை நடத்திக் கொண்டே இருந்தான்.

> அடிமைத்தனத்தை ஏற்றுக் கொண்டு அந்நியருக்கு அடி பணிந்து, பதவியும், சலுகையும் பெற்று வாழ்வதற்கு ஒருபோதும் தயாராக இல்லாமல் அந்நியர்களை தனது மண்ணிலிருந்து அடித்து விரட்டி சுதந்திர புருசனாக வாழ்வதே தனது ஒரே குறிக்கோள் என்று வாழ்ந்தான் பண்டார வன்னியன்

பண்டார வன்னியனின் சகோதரியான நல்லநாச்சியாரை, காக்கை வன்னியன் வஞ்சகமாகக் கொன்று பண்டார வன்னியனைப் பழி தீர்த்துக் கொண்டதாக ஒரு கர்ண பரம்பரைக் கதை உண்டு. இதை நிரூபிப்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

பண்டாரவன்னியனுக்கு கண்டி மன்னன் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனுடன் தொடர்புண்டென்று உறுதியாகத் தெரிந்தவுடன் ஆங்கிலேயர்கள், மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட ஆரம்பித்தனர். அந்தக் காலகட்டத்தில் இலங்கைக்கான ஆங்கிலேய தேசாதிபதியாக இருந்த பிடெரிக் நோத் பிரித்தாளும் தந்திரத்தின் அடிப்படையில் சில திட்டங்களைத் தீட்டினான். கண்டியை ஆண்ட தமிழ் பேசும் தெலுங்கு நாயக்க வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கனுக்கு எதிராக, பௌத்த சிங்களவரைத் தூண்டிவிட்டு குழப்பங்களை ஏற்படுத்தி அவன் பண்டாரவன்னியனுக்கு உதவி செய்யக்கூடிய சூழ்நிலையை தடுக்க முயன்றான். இதற்காக, கண்டிப்பிரதானியாக இருந்த பிலிமத்தலாவையை காக்கை வன்னியனை விலைக்கு வாங்கியது போல் விலைக்கு வாங்கினான்.




பிலிமத்தலாவை மூலம், ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனுக்கு எதிரான கிளர்ச்சியினைத் தூண்டிவிட்ட அதே நேரத்தில், காக்கை வன்னியன் மூலம், வன்னியில் கொலைகள், கொள்ளைகள், பாலியல் வன்முறைகளை நடத்துவித்து அதையெல்லாம், பண்டாரவன்னியனே செய்துவருவதாகவும், அவனைக் கொள்ளைக்காரன் என்றும் மக்கள் மத்தியில் நோத் நிர்வாகம் கதை கட்டிவிட்டது.

அடிமைத்தனத்தை ஏற்றுக் கொண்டு அந்நியருக்கு அடி பணிந்து, பதவியும், சலுகையும் பெற்று வாழ்வதற்கு ஒருபோதும் தயாராக இல்லாமல் அந்நியர்களை தனது மண்ணிலிருந்து அடித்துவிரட்டி சுதந்திர புருசனாக வாழ்வதே தனது ஒரே குறிக்கோள் என்று வாழ்ந்த பண்டார வன்னியனை கொள்ளைக்காரன் என்று சொன்னதையோ, அவன்தான் வன்னிப் பகுதியில் கொலை, கொள்ளை பாலியல் வன்முறைகளைச் செய்கிறான் என்பதையோ மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

கண்டியில் பிலிமத்தலாவையின் சதிகள் ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கனுக்குத் தெரிய வந்தது. அவன் அவனைக் கைதுசெய்ததும், தேசாதிபதி நோத்துக்கு அது ஒரு கௌரவப் பிரச்சினையாகி விட்டது. அது தனது அரசியல் சாணக்கியத்துக்கிடைத்த தோல்வியாக அவன் நினைத்தான். தமிழ் நாட்டிலிருந்து பண்டாரவன்னியன் கடல்வழியாக வெடிமருந்துகளையும், துவக்குகளையும் வரவழைத்து இராஜசிங்கனுக்கு கொடுக்கிறான் என்ற சந்தேகம், ஆங்கிலேயருக்கு இருந்தது. இதனால் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டுமானால் முதலில் பண்டாரவன்னியனை அழிக்க வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தனர்.



வெள்ளை எசமானனுடன் காக்கை வன்னியன்

இதற்கிடையில் கி.பி 1810 ஆம் ஆண்டு பெரும்படை ஒன்றைத் திரட்டி கிழக்கு மூலை என்ற இடத்தில் பண்டாரவன்னியன் ஆங்கிலேயரைத் தாக்கினான். இதில் ஆங்கிலேயருக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டதோடு, அவர்களது தளபதியும் கொல்லப்பட்டான்.

மீண்டும் கி.பி 1811 ஆம் ஆண்டு உடையாவூரில் ஆங்கிலேயருக்கும், பண்டாரவன்னியனுக்குமிடையே பெரிய யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில் படுகாயமடைந்த பண்டாரவன்னியனை அவனது வீரர்கள் பனங்காமம் வன்னிமைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அந்த மாவீரனது உயிர் பிரிந்ததாக வன்னி நாட்டார் குறிப்புகளிலிருந்தும், செவிவழிக் கதைகளிலிருந்தும் அறியமுடிகிறது.

வன்னியில் பண்டாரவன்னியன் உயிரிழந்ததும், அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே அதாவது ஆங்கிலேயருக்கு எச்சரிக்கை விடுக்கும் நோக்கிலேயே ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கன் பிலிமத்தலாவையின் தலையைக் கொய்து சந்தியில் நாட்டி வைத்ததாகச் சொல்லப்படுகிறது.

பண்டார வன்னியனின் அழிவோடு அதாவது அவன் கொல்லப்பட்டு 4 வருடங்களின் பின் கண்டி இராச்சியமும் ஆங்கிலேயரிடம் வீழ்ந்து விட்டது.



களத்தில் வெள்ளையனை வெட்டிச் சரித்த பண்டாரவன்னியனும் குருவிச்சி நாச்சியாரும்

- நக்கீரன்